முற்பகல் 10–50

அதேபோல், நகர்ப்புற அடுக்குமாடி வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். நகரப் பகுதிகளிலே, பேரூராட்சிகளிலே அரசு புறம்போக்கு இடங்களைத் தேர்வு செய்து தந்து, அங்கு பயனாளிகள் இருந்து, அந்தப் பயனாளிகள், தங்களின் பங்கை அரசிற்குச் செலுத்த முன்வரும்பட்சத்தில், நிச்சயமாக அந்த ஏழைகளுக்கு, அங்கு நம்முடைய அரசு வீடுகளைக் கட்டித் தரும் என்ற உத்தரவாதத்தைத் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 247, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

247—

புதைவடங்கள்

***9746—திரு. க. கணபதி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரவாயல் தொகுதியில் மேலே செல்லும் மின்கம்பிகளை புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரவாயல் தொகுதியில் உள்ள மின்கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.*

2022 மே 9]

திரு. க. கணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதியில் உயர் மட்டத்தில் செல்லும் மின்கம்பிகளை, பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரவாயல் தொகுதியைப் பொறுத்தவரையில் கே.கே. நகர், போரூர், அண்ணா நகர், அம்பத்தூர் ஆகிய நான்கு கோட்டங்கள் உள்ளன. சென்னை மாநகரப் பகுதிகளைப் பொறுத்தவரையில், கிண்டி, தண்டையார்பேட்டை, வியாசர்பாடி, கே.கே. நகர், போரூர், அண்ணா நகர், அம்பத்தூர் ஆகிய 7 கோட்டங்களில் 3,262 கிலோ மீட்டர் அளவில் மின் கம்பிகளை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் அதற்கானப் பணிகளை மேற்கொள்ள, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி, எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அதனால், நன்றி சொல்லி முடித்துவிடுங்கள்.*

திரு. க. கணபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பிற்கு தொகுதி மக்களின் சார்பாக இதயமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது தொகுதியில் உள்ள வானகரம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானகரம் பகுதியில் துணை மின்*

[2022 மே 9

நிலையம் அமைக்க, அங்கிருக்கக்கூடிய மின் இணைப்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், தேவை ஏற்படின் வரக்கூடிய ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.*

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் உள்ள கோணியம்மன் கோயில் தேர் மிகவும் பிரசித்தி பெற்றது. அத்தேர் செல்லும் வழியில் மேலே செல்லும் மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றியமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு திருவாரூர் உள்ளிட்ட மூன்று திருக்கோயில்களின் தேர்கள் செல்லும் வழியிலே மேலே செல்லும் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றியமைப்பதற்கான அனுமதிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். வரக்கூடிய ஆண்டுகளில் திருத்தேர்கள் செல்லும் பாதையில் உள்ள மின் கம்பிகளை, தேவைப்படும் இடங்களில் புதைவடங்களாக மாற்றியமைக்க, முன்னுரிமை அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலைப் பெற்று உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.*

திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, செங்கல்பட்டு நகராட்சி, நந்திவரம், கூடுவாஞ்சேரி நகராட்சிப் பகுதிகள் அதிகமான கட்டடங்கள் நிறைந்த பகுதிகளாகவும், அதிகளவு மக்கள் தொகை*

2022 மே 9]

உள்ள பகுதிகளாகவும் இருப்பதனால், எதிர்கால மக்கள் நலனைக் கருதியும், பாதுகாப்புக் கருதியும் அந்த நகராட்சிகளில் உள்ள மின் கம்பிகளைப் புதைவடங்களாக அமைத்துத் தர வேண்டுமென தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்தின் நிதிநிலைமையின் அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தருகின்ற ஊக்கமும், அதேபோல் அரசு வழங்கக்கூடிய மானியத்தின் அடிப்படையிலும் இப்போது மின்சார வாரியம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. எனவே, மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றியமைக்க, தேவையின் அடிப்படையில், எந்தெந்த இடங்களில் அது முக்கியம் என்பதை மட்டும் கவனத்தில் கொண்டு, இப்போது பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்தப் பகுதிகளும், வரக்கூடிய ஆண்டுகளில் தேவை ஏற்படின் அரசின் கவனத்தில் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட கடநாடு பகுதியில் ஒரு sub-station அமைத்துக் கொடுத்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊட்டியில் அதிகளவில் சுற்றுலா பயணிகள் வருகின்றார்கள். அங்கு Cottages, Lodges போன்றவை இருக்கின்றன. போன வாரம் இரண்டு நாட்கள் current cut ஆகி குடிநீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்ட நிலை இருந்தது. Parsons Valley பகுதியிலிருந்து வருகின்ற அடர்ந்த காட்டுப் பகுதிகளில். . .

[*2022 மே 9*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. ஆர். கணேஷ்: *12 கிலோ மீட்டர் அளவில் புதைவடத் தடங்களை அமைப்பதற்கு ரூ.20 கோடி* budget *என்று சொல்லியிருக்கின்றார்கள்—தயவுசெய்து செய்து கொடுத்தீர்கள் என்றால், சுற்றுலா பயணிகள், இரண்டு நாட்கள் குடிநீர் இல்லாமல் அவதிப்பட்டதற்கு ஒரு தீர்வு கிடைக்கும். எனவே, புதைவடக் கம்பிகளை அமைத்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரத்தில் மழை பெய்த காரணத்தினால், ஊட்டி மற்றும் கோவை மாவட்டங்களில் சில இடங்களில் மின் விநியோகத்தில் சில பாதிப்புகள் ஏற்பட்டன. உடனடியாக அது சரி செய்யப்பட்டு, இப்போது சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள நீலகிரி மாவட்டத்தில், தங்களது தொகுதியில் ஆய்வுகள் செய்யப்பட்டு, தேவை ஏற்படின் அதற்குரிய நடவடிக்கைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியினைப் பெற்று மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. S. அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதிக்குட்பட்ட பெரணமல்லூர் பேரூராட்சி, பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம், 58 கிராமங்களை உள்ளடக்கியது. அந்தப் பகுதிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மின்னிணைப்பு பெற்ற விவசாயிகள் வாழ்ந்து வருகிறார்கள். அதுமட்டுமல்ல, அரிசி ஆலைகள் அதிகமாக உள்ளன. கல் அரைக்கும் ஆலைகள்,* M–sand *ஆலைகள் போன்ற ஆலைகள்*

2022 மே 9]

அதிகமாக இருப்பதால் இந்தப் பகுதியில் 33/11 KV *துணை மின் நிலையம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதனால் அங்கு தொடர்ச்சியாக மின்னழுத்தம் ஏற்படுகின்ற காரணத்தினால் 110/10* KV *துணை மின் நிலையம் அமைத்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். கிராமப்புறப் பகுதிகளில் சுமார் 40, 50 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட* Low Tension (LT) line-*கள் சாலைகள் போடப்பட்டு, போடப்பட்டு, தற்போது தாழ்வான நிலைக்கு மாறிக்கொண்டிருப்பதால், அங்கு டிராக்டரில் கரும்பு ஏற்றிக்கொண்டு செல்லும் விவசாயிகளுக்கு விபத்துகள் ஏற்படுகின்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், அறுவடை இயந்திரம் மிக உயரமாக இருப்பதால் மின்னிணைப்பு* line-*களில் பாதிப்புகள் ஏற்படுகின்ற சூழ்நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழகம் முழுவதும் உள்ள* Low Tension line-*களை ஆய்வு செய்து சரி செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 316 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கி, அதில் திருவண்ணாமலை மாவட்டத்தில் 17 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான அனுமதியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். அந்த 17 துணை மின் நிலையங்களில், 7 துணை மின் நிலையங்கள் வந்தவாசி தொகுதிக்கு மட்டும் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதிகளை வழங்கியிருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டு அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. அதுபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய மற்ற குறைபாடும் ஆய்வு செய்யப்பட்டு, விரைவாகத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

[2022 மே 9

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோட்டில் அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் வைகாசி தேர் என்பது மிகவும் பிரசித்திப் பெற்றது. அந்தத் தேரின் உயரம் 110 அடி. அதற்குக்கீழ்* base *உள்ளது. அந்தத் தேர் 4 வீதிகளில் பவனி வரும்போது மேலே உள்ள மின்கம்பிகளில் பட்டு விபத்துகள் நடப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. குறைந்த தூரம்தான் என்பதால் அந்த நான்கு வீதிகளில் மட்டும் மின்கம்பிகளை புதைவடமாக மாற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோயில் தேர் ஓடும் பகுதிகளில் மின்கம்பிகள் புதைவடமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பது மிக மிக முக்கியமான பணியாகும். எனவே, இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று அனுமதிகளைப் பெற்று முன்னுரிமை அடிப்படையில் அந்தப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் மாநகராட்சியில் தமிழகத்தில் இருக்கக்கூடிய தேர்களில் மூன்றாவது பெரிய தேராக இருக்கக்கூடியது சாரங்கபாணி கோயில் தேர் ஆகும். இன்றைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே துணை முதல்வராக இருந்தபோது திருத்தேர்கள் ஓடக்கூடிய பகுதிகளில் புதைவடம் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். கும்பகோணத்தில் மொத்தம் 12 தேர்கள் பவனி வருகின்றன. அந்த 12 தேர்கள் போகின்ற இடங்களிலெல்லாம் புதைவடங்களை அமைத்துத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2022 மே 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் திருத்தேர்கள் ஓடக்கூடிய பகுதிகளில் மின்கம்பிகளை புதைவடங்களாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பதை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று வரக்கூடிய ஆண்டுகளில் படிப்படியாக ஒவ்வோர் ஆண்டிலும் அதற்குரிய பணிகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியினைப் பெற்று அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 248, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

248—

பேருந்து பணிமனை

***10169—திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடபழனி பேருந்து பணிமனையை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வணிக வளாகங்களுடன் பணிமனைகளை நவீனமயமாக்கி வருவாய் ஈட்டுதல் திட்டத்தின்கீழ் சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் 16 பணிமனைகள் மற்றும் பேருந்து நிலையங்களை நவீனப்படுத்தத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு உள்கட்டமைப்பு வளர்ச்சிக் குழும நிதி (TNIDB) உதவியுடன் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை